# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்

## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

29.12.2020–ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி.ஏ.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

பொருட்கள்

குறள் :
கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக.

167. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021ன் கீழ் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3, நாள்.11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | சிறப்புசாலைகள் திட்டநிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| வந்தவாசி | 3.00 | 2.70 | 0.30 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பிவைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ ண் | பணியின் பெயர் | சாலை நீளம் (கி) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|
| 1 | வந்தவாசி நகராட்சியில் வார்டு எண்.3, கோட்டைக்குள் தெருவில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.1, கோட்டை புதிய காலனி, வார்டு எண்.6, காயிதேமில்லத் நகர் மற்றும் வார்டு எண்.8, கவரைத்தெரு, ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல் பணி. | 1.520 | 5.00' & 6.00 | 100.00 |
| 2 | வந்தவாசி நகராட்சியில் வார்டு எண்.14, சன்னதிதெருவில், தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.19, புதிய பேருந்து நிலைய அணுகுசாலை (வலது புறம்) வார்டு எண்.22, பொட்டிநாயுடு தெரு விரிவாக்கம், வார்டு எண்.24, விநாயகமுதலி தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைத்தல் பணி. | 2.550 | 5.00'7.00 & 9.00 | 200.00 |
| | மொத்தம் | 4.070 | | 300.00 |

அலுவலக குறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க. எண்.529/2020/இ1, நாள்.11.12.2020

168. வாகனம் பொதுப்பிரிவு வந்தவாசி நகராட்சியில் பயன்படுத்தப்படும் ஈர்ப்பு வாகனம் TN25/AT 4738 என்ற வாகனம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தேர்தல் ஆய்வு கூட்டத்திற்கு செல்லும் வழியில் வாகனம் பழுதாகி விட்டதால் பேட்டரி Selt எடுத்ததாலும், பேட்டரி வாங்கி 3 ஆண்டுகள் பழமையானதாகவும், பேட்டரி Selt எடுக்கவில்லை. ஆகையால் புதியதாக பேட்டரி ஒன்று வாங்கியதற்கும் பழைய பேட்டரி ரூ.500/– க்கு எடுத்துக்கொண்டு புதிய பேட்டரி ரூ.7300/– மட்டும் பழைய பேட்டரிக்கு ரூ.500/–கழித்து ரூ.6800/– மட்டும் வாங்கி பொருத்தியமைக்கும் அவசரம் அவசியம் கருதி பிரிவு 15–ல் வாங்கி வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க. எண்.2099/2020/இ1, நாள்.12.12.2020

169. வந்தவாசி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வந்தவாசி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதிமொழி சான்று பெற (Self Declaration ) அனுமதித்து மன்றம் தீர்மானம் இயற்றப்பட்டது. இது குறித்து பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணை தெரிவிக்க தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செயப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.5208/– வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

நிர்வாக நலன்கருதி விளம்பரம் செய்யப்பட்டதற்கான

கட்டணம் ரூ.5208/– வழங்கிட மன்றம் ஒப்புதல் அளித்தல்.

(ந.க. எண்.2034/2020/இ1, நாள்.23.11.2020

170. வந்தவாசி நகராட்சியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சொத்து வரி.காலிமனை வரி, குழாய் கட்டணம், தொழில் வரி, கடை வாடகை மற்றும் குத்தகை செலுத்த பொது மக்களுக்கு அறிவிப்பு வழங்க ஆகும் செலவினத்திற்கு Kal Publication Pvt. Ltd.- 19899. 00 அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண்.1959/2020/இ1)

171. வந்தவாசி நகராட்சி பொது சுகாதார பிரிவில் 24 வார்டு பகுதியில் உள்ள வீடுகள் கடைகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகள் தினமும் நுண்ணுயிர் உரக்கிடங்கின் மூலம் அரவை செய்து மக்க வைக்கப்படுகின்றது. அரவை இயந்திரம் பொருத்திய நாள் முதல் சர்வீஸ் செய்யாத காரணத்தால் அவசர அவசியம் கருதி உடன் Surya Solutions நந்தம் பாக்கம் சென்னை–89 அவர்கள் மூலமாக Grinding of cutter replacement of 1 Blade All Allen key bolts & Nuts of Disc indicator 1 &2 Conveyor Service Spares 4 Spares 4 Assembly Charges ரூ.26500/– SGST 9% GST 9% உட்பட ரூ.31270/– தொகைக்கு பட்டியல் வரப்பெற்று பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

மன்றம் முடிவு செய்யலாம்.

தோராய செலவினம் ரூ.32000/–மன்ற அனுமதி வைக்கப்படுகின்றது.

(ந.க. எண்.1311/2020/எச்1)

172. வந்தவாசி நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு நிவர் புயல் பாதிப்பு மக்களுக்கு குறைய மழைநீர் தேங்காமல் வடிகால்செய்ய 23.11.2020–ல் JCB மூலம் வடிகால் வசதி செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் நேரடி உத்திரவு மூலம் 1 மணி நேரத்திற்கு JCB இயக்க விலைப்புள்ளி கீழ்காணும் விவரத்தில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் முகவரி | JCB ஒரு மணி நேர தொகை ரூ. | 1 மணி நேர டிரைவர் படி ரூ. |
|---|---|---|---|
| 1 | ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர், நெ.26, மக்தும் மரைக்காயர் தெரு, வந்தவாசி. | 1000 | 50 |
| 2. | பா.முருகேசன், ஒப்பந்ததாரர், நெ.43, தர்மராஜாகோயில்தெரு, வந்தவாசி. | 1050 | 100 |
| 3. | என்.திருநாவுக்கரசு, ஒப்பந்ததாரர் நெ.25, காஞ்சிபுரம் சாலை, வந்தவாசி. | 1100 | 150 |

அலுவலக குறிப்பு–

மன்றம் முடிவு செய்யலாம்.

நிவர் புயல் முன்னெச்சரிக்கை முன்னிட்டு மழைநீர் வடிகால் கால்வாய் பகுதிகள் JCB இயந்திரம் தூர் அள்ள குறைவான விலைப்புள்ளி கொடுத்த ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர், நெ.26, மக்தும் மரைக்காயர் தெரு, வந்தவாசி என்பவரது ஏற்றுக்கொள்ளப்பட்டு பணி உத்திரவு வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றம் அங்கீகரிக்கலாம்.

மேலும், தோராய செலவு ரூ.50,000/– மன்ற அனுமதி வைக்கப்படுகின்றது.

(ந.க. எண்.1312/2020/எச்1)

173. வந்தவாசி நகராட்சி பொதுசுகாதாரபிரிவில் நுண்ணுயிர் உரங்கிடங்கில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை ஜெலிக்க 03.08.2020–ல் விலைப்புள்ளி கோரியதில் 17.08.2020–ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்காணும் விவரத்தில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Sami, Engineering Works , Tindivanam Road, Vandavasi | 39,900- |
| 2. | Naven, Engineering Works , Tindivanam Road, Vandavasi | 43,000- |
| 3. | Ambil, Engineering Works, Narayanamoorthy Complex Chet pet Road, Vandavasi | 42,100- |

அலுவலக குறிப்பு–

மன்றம் முடிவு செய்யலாம்.

நகராட்சியில் உள்ள 24 வார்டு பகுதிகள் மற்றும் கடைகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகள் மக்கி பிறகு அதனை ஜெலிக்க வேண்டி உள்ளதால் நகர மன்ற அனுமதி எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி கொடுத்த சாமி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திண்டிவனம் சாலை, வந்தவாசி நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்கப்பட்டு மெஷின் சப்ளை செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

இதற்கு ஆகும் செலவு ரூ.40,000/– மன்ற அனுமதி வைக்கப்படுகின்றது.

(ந.க. எண்.1312/2020/எச்1)

174.வந்தவாசி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தில் நகர் பகுதியில் சேகரமாகும் மக்கும் மக்காத குப்பை வணிக நிறுவனங்களில் சேகரமாகும் மக்கும் குப்பை ஆகியவைகளை நுண்ணுயிர் உரம் மையத்திற்கு எடுத்து சென்று மக்கவைப்பதற்கு 14 எண்ணிக்கையில் பேட்டரி வாகனம் பொறியாளர் பிரிவு மூலம் வாங்கி வழங்கப்பட்டது. பராமரிப்பு தொடர்ந்து செய்யாத காரணத்தால், பழுது ஏற்பட்டு வாகனம் பயன்படுத்த முடியாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண்.7220/2020/P3, நாள்.09.07.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் கடித எண்.214/2020/A3, நாள்.05.08.2020ன் படி இந்நகராட்சியின் வருடாந்திர BOV ஒப்பந்ததாரர் Shree Surya Solutions 3/3 ஹரிகிருஷ்ணா காலனி நந்தம்பாக்கம் சென்னை–89 என்பவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே வருடாந்திர செலவுக்கு உண்டான தோராய செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்திற்கு பொருள் வைக்கலாம்.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வாகனம் பழுது செய்து அதற்கு உண்டான பட்டியல் பெற்று தொகை வழங்கலாம்.

(ந.க. எண்.1310/2020/எச்1)

175. வந்தவாசி நகராட்சி பகுதியில் வார்டு 1 முதல் 24 வரை டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் நோய் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழிக்கவும், தொற்று நோய்கள் பெருந்தாக்க அளவில் தோன்றா வண்ணம் துரிதப்படுத்தவும், கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.9508/2020/பா2, நாள்.02.09.2020 மற்றும் செய்யார் சுகாதார பணிகள் ந.க.எண்.2833/இ5/2013ன்படி 03.12.2020 முதல் 28.02.2021 வரை மூன்று மாதத்திற்கு டெங்கு நோய் தடுப்பு பணியாளர்களை நீட்டிப்பு செய்து பணி நடைபெற உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகையின் அடிப்படையில் வந்தவாசி நகராட்சி பகுதிக்கு 35 எண்ணிக்கையில் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் தினக்கூலி வழங்கிடவும் அதற்கு 3 மாதத்திற்கு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண்.1530/2020/எச்1)

176. வந்தவாசி நகராட்சி பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரக்கிடங்கில் எடைபோடும் இயந்திரம் 2 பழுது அடைந்து அதனை உள்ளூரில் பழுது நீக்கம் செய்ய ரூ.5000/– மற்றும் மாடு பிடிப்பதற்கு உண்டான கயிறு மற்றும் கோணிப்பை ஆகியவற்றிற்கு ரூ.1160– ஆக மொத்தம் ரூ.6160/–(ஆறாயிரத்து நூற்று அறுபது மட்டும்) பிரிவு 15–ல் அவசர அவசியம் கருதி உடன் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

1. அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எண்.2039/2020/எச்1)

177. வந்தவாசி நகராட்சியில் புரட்சி தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் கூடுதல் விவரங்களை கணக்கெடுப்பு பணி உரிய வழிகாட்டுதல் படி அரசு ஆணை (நிலை) எண்.170, நாள்.27.10.2020ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.12635/2020/UPA நாள்.03.11.2020ன் படியும் இந்நகராட்சியில் 2750 வறுமை கோட்டில் உள்ள குடும்பங்கள் கணினியில் வரப்பெற்றது அதில் கீழ்காணும் விவரப்படி கணினியில்

| | | |
|---|---|---|
| 2750 படிவங்கள் மற்றும் | | |
| கணக்கெடுப்பாளர் தொகை | ரூ.2750x10= | ரூ.27,500/– |
| கணினியில் இணையத்தில் பதிவேற்றம் | | |
| மொத்த படிவங்கள் | 2380x5 = | ரூ. 11,900/– |
| | மொத்தம் | ரூ.39,400/– |

எனவே மேற்கண்ட தொகையினை வழங்க அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண்.530/2020/எச்1)

178. வந்தவாசி நகராட்சி அலுவலகத்திற்கு அலுவலக உபயோகத்திற்கு காணொளி காட்சி மூலம் நடைபெறும் ஆய்வு கூட்டம் தங்கு தடையின்றி நடைபெற அவசரம் அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்றதில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள All in One System (Computer) வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கப்படுகிறது.
2. அவசரம் அவசியம் கருதி அலுவலக பயன்பாட்டிற்கு காணொளி காட்டி ஆய்வு கூட்டம் தங்கு தடையின்றி நடைபெற All in One System (Computer) சப்ளை பெற தோராய செலவினம் ரூ.55,000/– க்கு மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

(ந.க. எண்.2160/2020/எச்1)

179. வந்தவாசி நகராட்சி அலுவலகத்திற்கு அலுவலக பயன்பாட்டிற்கு வேலூர் மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் 04.06.2020த் தேதிய காணொளி காட்சி ஆய்வு கூட்டத்தின் அறிவுரைகளுக்கிணங்க வந்தவாசி நகராட்சி அலுவலகத்திற்கு அலுவலக பயன்பாட்டிற்கு (காணொளி காட்சி ஆய்வு கூட்டத்திற்காக) புதியதாக மடிக்கணினி மற்றும் அதற்கான உபகரணங்களுடன் ஒன்று வாங்கி கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும், மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
2. அவசரம் அவசியம் கருதி, நிர்வாக நலன் கருதி ரூ.58,000/– மடிக்கணினி மற்றும் உபகரணங்களுடன் ஒன்று வாங்கி கொள்ள அதற்கான செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க. எண்.2160/2020/எச்1)

180. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட் வார்டு எண்.1 முதல் 24 வரை உள்ள பகுதிகளில் சிறுமின்விசை பம்புகள் மற்றும் கைபம்புகள் பராமரிப்பு பணிகள் செய்ய ஆறு மாதகாலத்திற்கு (ஜனவரி 2021 முதல் ஜீன் 2021 வரை) பணிகளை மேற்கொள்ள தோராய செலவினமாக மதிப்பீடு ரூ.5,00,000/ – (ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 2176 /2020/இ1)

181. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட் வார்டு எண்.1 முதல் 24 வரை உள்ள தெருக்களில் குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் அனக்காவூரிலிருந்து வந்தவாசி வரை பிரதான குழாய்கள், வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், குடிநீர் குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் சரிசெய்யவும், பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் வழங்கும் பொருட்டும், ஆறு மாதகாலத்திற்கு (ஜனவரி 2021 முதல் ஜீன் 2021 வரை) பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தோராய செலவினமாக மதிப்பீடு ரூ.5,00,000/ – (ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 2177 /2020/இ1)

182. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பேருந்து நிலையம் அருகில் உயர்மின் அழுத்த கோபுர மின் விளக்குகள் ஒளிர்விக்கப்படாமல், போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூராக உள்ளது, மேலும் நிவர்புயல் காரணமாக விளக்குகள் அருந்து விடும் நிலை ஏற்பட்டதால் அ'தை உடனடியாக சரிசெய்ய உள்ளூர் ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.40,000/–க்கு மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 2172 /2020/இ1)

183. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18ல் உள்ள பொது மக்களின் கோரிக்கையை ஏற்று குடிசைபகுதியான (Slum Area) காரிய மேடை கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதாலும், சட்டத்திற்கு புறம்பான செயல்களை தடுக்கவும் மற்றும் மாடுகளை அதன் உள்ளே சில நபர்கள் கட்டி விடுவதாலும், மக்கள் காரியம் செய்யும் நேரங்களில் மிகவும் சிரமமாக உள்ளதால் அதனை சரிசெய்யும் பொருட்டு காரிய மேடை கட்டிடத்தை பராமரிப்பு செய்து சுற்றி கிரில் வேளி போடவும், தண்ணீர் வசதி செய்யவும், பெயின்டிங் பணிகள் செய்யவும் ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,000/–க்கு மட்டும் மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 2175 /2020/இ1)

184. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4ல் உள்ள பொது மக்களின் கோரிக்கையை ஏற்று பாபாசாகிப் தெருவில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய் , மழைநீர் வடிகால் அப்பகுதியில் உள்ளதால் அடிக்கடி கழிவுநீர் குழாயில் கலப்பதும், குழாய் உடைப்பு ஏற்பட்டதால் அதனை சரிசெய்யவும் சிரமமாக உள்ளது. மேலும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மேற்படி பகிர்மான குழாயினை மாற்றி அமைக்கும் பணிக்கு தோராய செலவினம் ரூ.75,000/—க்கு மட்டும் மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 2174 /2020/இ1)

185. வந்தவாசி நகராட்சியில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள சொத்து வரி.காலிமனை வரி, குழாய் கட்டணம், தொழில் வரி, கடை வாடகை மற்றும் குத்தகை செலுத்த பொது மக்ககளுக்கு அறிவிப்பு வழங்க ஆகும் செலவினத்திற்கு Express Publication Pvt. Ltd – 21000.00 அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 2174 /2020/இ1)

186. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் வடகிழக்கு பருவ மழை மற்றும் நிவர் புயல் காரணமாக ஒளிராமல் மற்றும் கீழே விழும் நிலையில் உள்ளவைகளை சரிசெய்யவும், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு உடனடியாக பணிகளை மேற்கொள்ளும், பொருட்டு உள்ளூர் விலைப்புள்ளிகளை பெற்று பொருட்கள் வாங்கவும், அதனை பொருத்தவும் ஆகும் தோராய செலவினம் ரூ.85,000/— க்கு மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க. எண். 2173 /2020/இ1)

187. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட Supply and laying, Spreading to wet mix macadam (WMM) at various Damaged roads and street Vandavasi Municipality ஆகிய பணிகளை செய்து கொடுக்கும் பணிக்கு பணி உத்திரவு வழங்குதல் தொடர்பாக.

| | | |
|---|---|---|
| 1. | ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர் | – 0.10 % சதவீதம் மதிப்பைவிட அதிகம் |
| 2. | B.மொய்தீன்இ ஒப்பந்ததாரர் | – 0.03 % சதவீதம் மதிப்பைவிட குறைவு |
| 3. | இமஜீத், ஒப்பந்ததாரர் | – 0.17 % சதவீதம் மதிப்பைவிட அதிகம் |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் 0.03% மதிப்பைவிட குறைவான விலைப்புள்ளிகொடுத்துள்ள B.மொய்தீன் ஒப்பந்ததாரர், என்பவரின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க. எண்.109 /2020/இ1)

188. வந்தவாசி நகராட்சி பொதுசுகாதார பிரிவில் வார்டு–18ல் உள்ள பழைய காலனி மற்றும் புதிய காலனியில் உள்ள பொது கழிப்பிடம் நச்சுதொட்டி நிரம்பி துர்நாற்றம் ஏற்படுவதாக வந்த புகார் மனுவை அனுப்பி நகராட்சியில் நச்சுதொட்டி வாகனம் இல்லாத காரணத்தால் தனியார் வாகனம் மூலம் ஆறு (6) லோடு நச்சு உறிஞ்சி எடுத்ததிற்கு பணியாளர் கூலி உட்பட ரூ.18,000/– வழங்கலாம்.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தொகை ரூ.18,000/– வழங்கலாம்.

(ந.க. எண்.2155 /2020/எச்1)

189. வந்தவாசி நகராட்சி பகுதி ஆரணி ரோடு, பெரிய காலனி , சீனுவாசநகர் பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்பட்ட திடீர் வெடிப்புகள், நகரமன்ற முன் அனுமதியுடன் பிரிவு–15ல் அவசர அவசியம் கருதி சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதன் செலவினம் ரூ.95,724/– மேற்படி செலவினத்தை அனுமதிக்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண்.1363 /2020/ந.அ.ஆ1)

190. இந்நகராட்சி பொது சுகதார பிரிவில் வடகிழக்கு பருவமழை தொற்று நோய் பரவல் தடுப்பதற்கும் டெங்கு நோய் தடுப்பு பணிக்கும், கோயில் திருவிழாக்கள், துக்க நிகழ்வுகள் ஆகியவற்றின் பிளிச்சிங்பவுடர், சுண்ணாம்பு நீர் ஆகியவற்றிற்கு விலைப்புள்ளி 09.11.2020–ல் கோரியதில் 12.11.2020–ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்காணும் விவரத்தில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பிளிச்சிங்பவுடர் கிலோ | லைம் பவுடர் கிலோ |
|---|---|---|---|
| 1. | Rajeswari L. Nathan chemicals Traders , 115-90B 2nd Floor, Perambur High Road, Chennai. | 58 / kg | 18 / kg |
| 2. | A.S.Developers , 1-324 Avadi Road Sennerkuppam, poonamaliee, Chennai. | 64/ kg | 23.50/ kg |
| 3. | SB & CO, 1 ESI Nager, Thiruvancherry Agaram Mani Road, solaiyur Chennai-73 | 62 / kg | 21/ kg |

இந்நகராட்சி பொது சுகாதார தேவைக்கு பிளிச்சிங்பவுடர் – 5000 kg மற்றும் சுண்ணாம்புநீர்–10,000 kg வாங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி தொற்று நோய் பரவல் தடுக்கவும், டெங்குநோய் உற்பத்தி ஆகும். கொசுப்புழு உற்பத்தி தடுக்கவும், அவசர அவசியம் கருதி, நகர மன்ற அனுமதி எதிர்நோக்கி குறைவான விலைப்புள்ளி கொடுத்த Rajeswari L. Nathan chemicals and Traders விலைப்புள்ளி ஏற்கப்பட்டு பணி உத்திரவு வழங்கி சப்ளை பெறவும், தொகை வழங்கவும், நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேலும், செலவு ரூ.4,70,000/– மட்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

(ந.க. எண்.1987 /2020/எச்1)

29/12/20

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
வந்தவாசி நகராட்சி.

29/12/2020